**ஜனவரி – 02**

# TNPSC துளிகள்

- ஈரோடு மாவட்ட வனத்துறையும், தமிழ்நாடு பட்டாம்பூச்சிகள் சங்கமும் இணைந்து முதல்முறையாக சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் டிசம்பர் 29 மற்றும் 30 தேதிகளில் பட்டாம்பூச்சிகள் மீதான கணக்கெடுப்பை மேற்கொண்டன.
  - இக்கணக்கெடுப்பு குழு 150 வகையான பட்டாம்பூச்சிகளையும், 241 வகையான பறவைகளையும் வனத்தினுள் அடையாளம் கண்டது.
- ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தின் கீழ் மத்திய அரசு நாகாலாந்து மாநிலம் முழுவதையும் மேலும் ஆறுமாத காலத்திற்கு பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவித்து இருக்கின்றது.
- ஜப்பானின் நிதயுதவி நிறுவனமான ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு அமைப்புடன் இந்திய அரசு 75 சதவிகித மெட்ரோ ரயில் வண்டிகளை இந்தியாவில் தனது சொந்தத் தொழிற்சாலையிலோ அல்லது இந்திய நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்தோ தயாரிப்பதற்காக ஒப்பந்தம் செய்து இருக்கின்றது.
- மத்திய தகவல் ஆணையத்தில் புதிய தலைமை தகவல் ஆணையராக சுதிர் பார்கவா என்பவரையும் நான்கு புதிய தகவல் ஆணையர்களையும் மத்திய அரசு நியமித்து இருக்கின்றது.
- அஸ்வானி லோகனி என்பவரின் ஓய்வைத் தொடர்ந்து மத்திய அரசானது ரயில்வே வாரியத்தின் புதிய தலைவராக V.K. யாதவ் என்பவரை நியமித்து இருக்கின்றது.
- சர்வதேச கிரிக்கெட் குழுமத்தால் இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் துவக்க ஆட்டக்காரரான ஸ்மிரிதி மந்தானா ஐசிசியின் ஆண்டிற்கான பெண் கிரிக்கெட் வீரராகவும் ஐசிசி பெண்கள் ஒருநாள் போட்டிகளின் ஆண்டிற்கான வீரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- செயின்ட் பீட்டர்ஸ்பெர்க்கில் நடைபெற்ற உலக துரித செஸ் போட்டியில் மாக்னஸ் கார்ல்சென் 17/21 என்ற புள்ளிகளுடன் தனது சாம்பியன்ஷிப்பைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார். இவர் போலந்தின் கிராண்ட் மாஸ்டரான ஜன்-கிருசைஸ்டாப் ருடா என்பவரைத் தோற்கடித்தார். ஜப்பானிய அமெரிக்கரான ஹிகாரு நகாமுரா மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.
  - இந்த வெற்றியானது நார்வே வீரரின் 10-வது உலக அளவிலான அவரது வாழ்நாள் சாதனை வெற்றியாகும்.
- வங்கதேச கிரிக்கெட் அணித் தலைவர் மஸ்ரப் மோர்தாசா அந்நாட்டின் 11-வது பொதுத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியைப் பதிவு செய்திருக்கிறார். இதன் மூலம் அந்நாட்டில் கிரிக்கெட் விளையாட்டில் நடப்பில் விளையாடிக் கொண்டிருக்கும் ஒரு வீரர் முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நபராகியுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஒற்றைப் பயன்பாட்டிற்கான பிளாஸ்டிக் (நெகிழி) மீதான தடை

- 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களின் மீதான உற்பத்தி, வர்த்தகம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் மீதான தமிழ்நாடு அரசின் தடையாணையானது மாநிலத்தில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வந்தது.
- கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களில் உள்ள சட்டங்களை ஆய்வு செய்த பின், இங்கு யார் தடையை மீறுகிறார்களோ அந்த பயன்பாட்டாளர்கள் மீது அபராதம் விதிக்க அரசு முடிவு எடுக்கும்.
- தடை செய்யப்பட்ட இந்த 14 வகையான பொருட்கள் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மொத்த பிளாஸ்டிக்கில் 5 சதவிகிதம் மட்டுமே ஆகும்.
- ஏற்கனவே மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் இரண்டு வருடங்களில் பல் அடுக்கு கொண்ட சுத்திகரிக்கப்பட முடியாத பிளாஸ்டிக்கின் பயன்பாடு மற்றும் உபயோகத்தினைத் தவிர்த்திட பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை (திருத்தம்) விதிகள் 2018 என்பதனை வெளியிட்டு இருக்கின்றது.




# தேசியச் செய்திகள்

## புதிய குடியேற்றத்திற்கான சோதனைச் சாவடி

- மத்திய உள்துறை அமைச்சகம் இந்தியாவில் நுழைவதற்கோ அல்லது வெளியேறுவதற்கோ பயன்படுத்த வசதியாக ஒரு அதிகாரப் பூர்வமான குடியேற்றத்திற்கான சோதனைச் சாவடியாக போர்ட் பிளேயர் விமான நிலையத்தை அறிவித்திருக்கின்றது.
- இதன்பிறகு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நேரடியாக அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்குச் செல்ல முடியும்.

- மேலும் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி முதல் அந்தமான் நிக்கோபார் மற்றும் துறையின் குற்றவியல் விசாரணைத் துறையில் உள்ள காவல்துறை கண்காணிப்பாளர் அதிகாரியை போர்ட் பிளேயர் விமான நிலையத்தில் உள்ள சோதனைச் சாவடியில் குடிமையியல் அதிகாரியாகவும் அமைச்சகம் நியமித்திருக்கின்றது.

## தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள்

- சமீபத்தில் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனமானது 6 புராதனச் சின்னங்களைப் பாதுகாக்கப்பட்ட மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தமையாக அறிவித்திருக்கின்றது.
- நாட்டில் இந்நிறுவனத்தின் கீழ் 3686 பாதுகாக்கப்பட்ட புராதனச் சின்னங்கள்/மையங்கள் உள்ளன. தற்பொழுது இந்த எண்ணிக்கை 3693 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- இந்நிறுவனத்தால் பாதுகாக்கப்படும் தளங்களில் உத்தரப்பிரதேசம் (745), கர்நாடகா (506) மற்றும் தமிழ்நாடு (413) ஆகியவை அதிக எண்ணிக்கையைக் கொண்டுள்ளன.
- சமீபத்தில் சேர்க்கப்பட்ட புதிய புராதனச் சின்னங்களாவன
    - மகாராஷ்டிராவின் நாக்பூரில் உள்ள 125 வருட பழமையான உயர்நீதிமன்றக் கட்டிடம்,
    - ஆக்ராவில் உள்ள முகலாயர் காலத்திய சின்னங்கள் – ஆகா கானின் ஹவேலி மற்றும் ஹாதி கானா,
    - ராஜஸ்தானின் ஆல்வார் மாவட்டத்தில் உள்ள பழமையான நீம்ரானா பாஹோரி,
    - ஒடிசாவின் போலங்கீர் மாவட்டத்தின் ராணிப்பூர் ஜாரெயிலில் உள்ள கோவில்கள்,
    - உத்தரகாண்ட் மாநிலம் பித்தோர்கார் மாவட்டத்தின் கோதாலியில் உள்ள விஷ்ணு கோவில்.
- 1958 ஆம் ஆண்டின் பழங்கால புராதனச் சின்னங்கள் மற்றும் அகழ்வாராய்ச்சி மையங்கள் சட்டத்தின்படி பழமையான புராதனச் சின்னம் என்பது
    - ஏதேனும் ஒரு வடிவில் எழுப்பி அமைக்கப்பட்ட புராதனச் சின்ன அமைப்பு அல்லது
    - ஏதேனும் செயற்கையாக உண்டு பண்ணப்பட்ட ஒரு மேடை அல்லது புதைக்கப்பட்ட ஒரு இடம்.
    - ஏதேனும் குகை, பாறை வெட்டு சிற்பக்கலை, கல்வெட்டு
    - வரலாற்றுப் பூர்வமான, பழமை வாய்ந்த, கலை நுட்பமான ஒற்றைக்கல் சின்னம் ஆகியனவற்றைக் கொண்டதாகும்.
- 2016 மற்றும் 2017 காலகட்டங்களில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தளங்களுக்கான பட்டியலில் ஒரு புதிய தளமும் சேர்க்கப்படவில்லை.
- 2015ம் ஆண்டில் கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் நடவயல் என்னுமிடத்தில் உள்ள விஷ்ணு கோவிலே கடைசியாக இப்பட்டியலில் சேர்க்கப்பட்ட சின்னம் ஆகும்.

## மகளிர் காவலர்களுக்கான தன்னார்வலர்கள்

- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகம், மத்திய உள்துறை அமைச்சகத்துடன் இணைந்து மாநிலங்களிலும் ஒன்றிய ஆட்சிப் பிரதேசங்களிலும் மகளிர் காவலர்களுக்கான தன்னார்வலர்களை நியமிக்க திட்டம் தீட்டி இருக்கின்றது.
- இந்த தன்னார்வலர்கள் திட்டம், இதற்காக சிறப்பான முறையில் பயிற்சியளிக்கப்பட்ட பெண்கள் தன்னார்வலரான காவலர்களாக செயல்படுவதன் மூலம் போலீஸ் அதிகாரிகளுக்கும் கிராமங்களில் உள்ள உள்ளூர் சமூகங்களுக்கும் இடையேஒரு இணைப்பை உருவாக்கும் என்று எண்ணுகின்றது.
- நாடு முழுவதும் ஒரு கிராமப் பஞ்சாயத்திற்கு ஒரு மகளிர் தன்னார்வ காவலர் நியமிக்க திட்டமிடப்பட்டிருக்கின்றார்.
- 2016 - 17 நிதியாண்டின் நிர்பயா நிதியின் கீழ் கர்னால் என்னுமிடத்திலும், மகிந்தர்கார் எனும் மாவட்டத்திலும் மகளிர் தன்னார்வக் காவலர்கள் நியமிக்கப்பட்ட முதல் மாநிலம் ஹரியானா ஆகும்.

## சிறிய வன உற்பத்தி பொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை

- மத்திய அரசானது அரசின் குறைந்தபட்ச ஆதார விலை (MSP – Minimum Support Price) திட்டத்தின் கீழ் 7 சிறு வன உற்பத்திப் பொருள்களை (Minor forest produce-MFP) உள்ளடக்குவதாக அறிவித்துள்ளது.
- உலர்த்தப்பட்ட மஹீவா மலர்கள், உலர்த்தப்பட்ட தேஜாபட்டா மற்றும் உலர்த்தப்பட்ட கொக்கும் ஆகியவை இந்த திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட புதிய பொருள்களாகும்.
- மேலும் அரசு 2013ல் ஆண்டிலிருந்து சேர்க்கப்பட்ட பொருள்களில் 23 சிறு வன உற்பத்தி பொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்திக் கொண்டு இருக்கின்றது.

### *MFP-க்கான MSP*

- வனப்பகுதிகளில் வசிக்கும் சமுதாயத்தினரின் பல ஆண்டு கோரிக்கைகளுக்குப் பின்னர் 2013 - 14 ஆம் ஆண்டில் முதன்முறையாக சிறு வன உற்பத்தி பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை அரசு அறிவித்தது.
- இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவு சந்தை மேம்பாட்டு கூட்டமைப்பு லிமிடெட்டால் (Tribal Cooperative Marketing Development Federation of India Ltd -TRIFED) அமைக்கப்பட்ட விலைப் பிரிவு அமைப்பு, இந்த திட்டத்தின் கீழ் புதிய MFP-களைச் சேர்த்துக் கொள்ள பரிந்துரை செய்கிறது.
- 80% வரையிலான பழங்குடியினர் சமுதாயத்தின் பண வருமானத்தை MSP அளிக்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## தனிநபர் சில்லறை பணவழங்கீட்டுப் பழக்கங்கள் மீதான ஆய்வு

- இந்திய ரிசர்வ் வங்கியானது தனிநபர் சில்லறை பணவழங்கீட்டுப் பழக்கங்கள் மீதான ஒரு ஆய்வைத் தொடங்கியுள்ளது.

- இந்த ஆய்வானது பணவழங்கீட்டுப் பழக்கங்கள் குறித்து டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, பெங்களூரு மற்றும் கௌகாத்தி ஆகிய நகரங்களில் உள்ள தனிநபர்களிடம் இருந்து தகவல்களைப் பதிவு செய்யும்.
- இந்த கணக்கெடுப்பானது வெவ்வேறு சமூக-பொருளாதார பின்னணியில் உள்ள சுமார் 6000 தனிநபர்களிடமிருந்து அவர்களது பணவழங்கீட்டுப் பழக்கங்களைப் பற்றிய தரமான பதில்களை எதிர்பார்க்கிறது.
- இதன் களப்பணியில் ரிசர்வ் வங்கியின் சார்பாக சிக்மா ஆய்வு மற்றும் ஆலோசனை நிறுவனமானது கணக்கெடுப்பை நடத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## குறைந்தபட்ச கல்வித் தகுதி நீக்கம்

- ராஜஸ்தான் மாநில அரசானது உள்ளூர் தேர்தலில் போட்டியிடுவதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதி நிலையை ஒழித்துள்ளது.
- முந்தைய அரசானது 2015 ஆம் ஆண்டு கீழ்க்காணும் நிபந்தனைகளை அறிமுகப்படுத்தியது.
    - நகராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
    - பஞ்சாயத்துத் தேர்தல்களில் தலைவர் பதவிக்கு போட்டியிட 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
    - ஜில்லா பரிஷத் அல்லது பஞ்சாயத்து சமிதி தேர்தலில் போட்டியிட 5 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## STEM-இன் நட்சத்திர நாயகர்கள்

- ஆஸ்திரேலிய அரசின் STEM என்ற முன்முயற்சியின் கீழ் உள்ள STEM பட்டியலில் உள்ள 60 நபர்களில் நட்சத்திர நாயகர்களாக இந்தியாவில் பிறந்த 3 பெண்கள் இடம் பிடித்துள்ளனர்.
- இந்தியாவில் பிறந்து வளர்ந்த ஒனிஷா படேல் (அகமதாபாத்), தேவிகா காமத் (கோயம்புத்தூர்) மற்றும் ஆஷா ராவ் ஆகியோர் அறிவியல் துறையில் பெருமைமிகு புத்தாக்க பணிகளைப் புரிந்துள்ளனர்.



## தேசிய நிருத்ய ஷிரோமணி விருது

- உலகளாவிய அளவில் நடனக் கலையை வளர்ச்சியுறச் செய்வதற்காக தேசிய நிருத்ய ஷிரோமணி என்ற விருதானது அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்ட அனின்டிட்டா நியோகி அனாம் என்ற கதக் நடனக் கலைஞருக்கு வழங்கப்படுகிறது.
- இந்த விருதானது, கட்டாக்கில் நடைபெறும் சர்வதேச நடனம் மற்றும் இசைத் திருவிழாவான 10-வது கட்டாக் மகோத்சவ் என்ற விழாவின் தொடக்க நாளன்று வழங்கப்படும்.
- இவர் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இந்தியக் கலைகளைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் புரிந்த அவரின் சாதனைகளுக்காக சிறப்பு வாய்ந்த தேசிய விருதுகளான ஜெயதேவ் ராஷ்ட்ரிய புரஸ்கார் மற்றும் பிதக்தா நர்த்தகி சம்மான் போன்ற விருகளைப் பெற்றுள்ளார்.

- - - - - - - - - - - - - - -